---

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை வைப்பகக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமையாண்மையில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையிலுள்ள நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, திட்டத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வின் மீதான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு திட்டத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள்

அல்லது நிலைமைகள் திட்டத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முடியுமான அளவிற்கு பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பு மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் நோக்கில் திட்டத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு நிதியத்தினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதா எனவும்,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும்.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, திட்டத்தின் மீளாய்வாண்டிற்கான தொழிற்பாடுகள் ரூபா 10.6 பில்லியன் வரிக்குப் பின்னரான மிகையினை விளைவித்திருந்ததுடன் நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்குப் பின்னரான மிகை ரூபா 7.7 பில்லியனாகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 2.9 பில்லியன் முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. நிதிக் கருவிகளிலிருந்தான வட்டி வருமானம் ரூபா 1.4 பில்லியனால் அதிகரித்திருந்தமை மற்றும் இழப்பீட்டு கொடுப்பனவு ரூபா 2 பில்லியனால் குறைவடைந்திருந்தமை என்பன நிதி விளைவுகளில் ஏற்பட்ட இந்த முன்னேற்றதிற்கு பிரதானமாக பங்களித்திருந்தன.

(ஆ) திட்டத்தின் நிதி நிலைமைக் கூற்றின் படி, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை வைப்பகக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் நிதியக் கணக்கின் மீதி நேரொத்த முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவாறான ரூபா 51.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 62.7 பில்லியனுக்கு அதாவது ரூபா 10.8 பில்லியனால் அல்லது 21 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

2.2 **நிதியத்திருந்து மேற்கொண்ட கொடுப்பனவுகள்**

2010 இன் 1 ஆம் இலக்க இலங்கை வைப்பகக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டப் பிரமாணத்தின் 9.10 ஆம் பிரிவின் பிரகாரம், 01 சனவரி 2012 அல்லது அதற்குப் பின்னர் நாணயச் சபையினால் கட்டளையிடப்பட்டவாறான இடைநிறுத்தல்கள்/ இரத்துச்செய்தல்கள் விடயங்களிற்காகவே இழப்பீடு செலுத்தப்படுதல் வேண்டும். அதற்கமைய, மூன்று அங்கத்துவ நிறுவனங்களின் அனுமதிப்பத்திரங்கள் நாணயச் சபையினால் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, மீளாய்வாண்டின் இறுதி வரை அந்த மூன்று அங்கத்துவ நிறுவனங்களில் இரண்டு அங்கத்துவ நிறுவனங்களின் 5,681 வைப்பாளர்களிற்கு ரூபா 2,218 மில்லியன் பெறுமதியான இழப்பீடு செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அந்த மூன்று அங்கத்துவ நிறுவனங்களினதும் 51,635 வைப்பாளர்களிற்குச் செலுத்தவேண்டியுள்ள மொத்த இழப்பீட்டு மீதி ரூபா 1,526 மில்லியனாகும்.

3. **செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **செயற்பாட்டுச் செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அ. | 2010 இன் 1 ஆம் இலக்க இலங்கை வைப்பகக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டப் பிரமாணத்தின் 9.4 ஆம் பிரிவின் பிரகாரம், அங்கத்துவ நிறுவன மொன்றின் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாதத்திற்குள் குறித்துரைத்த வரம்பினுள் இழப்பீடு செலுத்தப்படுதல் வேண்டும். இருப்பினும், செலுத்தப்பட வேண்டிய இழப்பீட்டில் 8 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவம் செய்யும் ரூபா 311 மில்லியன் இழப்பீடு மாத்திரம் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் அவ்வாறு அனுமதிப்பத்திரங்கள் இரத்துச்செய்யப்பட்ட மூன்று அங்கத்துவ நிறுவனங்களின் வைப்பாளர்களிற்கு குறித்த ஆறு மாதத்தினுள் செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | சொல்லப்பட்ட நடைமுறையுடன் இணங்கியொழுகுதல் வேண்டும். |
| ஆ. | நாணயச் சபை அங்கீகரித்த இழப்பீட்டு நடைமுறையின் 1.3.1 (சீ) பிரிவின் பிரகாரம், தொடர்புடைய ஒழுங்கமைப்பாளர் என்ற வகையில் வங்கி சாராத நிதி நிறுவனங்களின் மேற்பார்வைப் பணிப்பாளர், திட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள மாதிரிக் கமைய ஒழுங்கமைப்பாளரால் சான்றுறுதிப் படுத்திய வைப்பாளர் பட்டியலொன்றை தொழிற்பாட்டுக் குழுவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். சான்றுறுதிப்படுத்திய வைப்பாளர் களின் பட்டியிலின் சரியான | ஏற்றுக்கொள்ளப்பட்டது | சொல்லப்பட்ட நடைமுறையுடன் இணங்கியொழுகுதல் வேண்டும். |

தன்மையினை குறித்த அங்கத்துவ நிறுவனத்தின் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்ட திகதியிலிருந்து இரண்டு மாதங்களிற்குப் பிந்தாத வகையில் நேரடியாகவோ அல்லது கணக்காய்வாளர் ஒருவர் ஊடாகவோ தொடர்புடைய ஒழுங்கமைப்பாளர் மெய்மை யாய்வு செய்தல் வேண்டும். இருப்பினும், அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்ட மேற்படி மூன்று அங்கத்துவ நிறுவனங்கள் தொடர்பில் ஒழுங்கமைப்பாளரால் வைப்பாளர் களின் பட்டியல் சான்றுறுதிப்படுத்தப்பட் டிருக்கவில்லை. அவ்வாறான சான்றுறுதிப் படுத்திய வைப்பாளர் பட்டியலை சமர்ப்பிக்க முடியாமை தொடர்பில் ஒழுங்கமைப்பாளர் முன்வைக்கப்பட்ட விடயங்களைக் கருத்திற் கொண்டு இதற்காக மாற்றுவழி நடைமுறை களைப் பின்பற்றுவதற்கு நாணயச் சபை யினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

## 3.2 அங்கத்துவ நிறுவனங்களிற்கான கடன்கள் (MIs)

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2010 இன் 1 ஆம் இலக்க இலங்கை வைப்பகக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டப் பிரமாணத்தின் 8.1(ii) ஆம் பிரிவின் பிரகாரம், எந்தவொரு அங்கத்துவ நிறுவனத்திற்கும் அந்த அங்கத்துவ நிறுவனம் மோசமான திரவத்தன்மை பிரச்சினை எதிர்கொண்டுள்ள சந்தர்ப்பத்தில் மாத்திரம் பிணையளிக்கப்பட்ட முற்பணங்கள் மற்றும் கடன்களை வழங்க முடியும். அதற்கமைய, 2014 திசெம்பர் 15 ஆந் திகதி ஒரு அங்கத்துவ நிறுவனத்திற்கு ரூபா 6 பில்லியன் கடன் வழங்கப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அக்கடனில் பெறவேண்டிய தொகை ரூபா 1.9 பில்லியனாகும். இக்கடன் தொடர்பில் வட்டி உள்ளிட்ட மீளளிக்கப்பட வேண்டிய தவணைப்பணம் 2020 மார்ச் முதல் நிலுவையாக உள்ளதுடன், நிதிசார் வணிகத்தை மேற்கொள்வதற்காக குறித்த அங்கத்துவ நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரம் 2020 மே 22 முதல் அமுலுக்குவரும் வகையில் நாணயச் சபையால் இரத்துச்செய்யப்பட்டது. மேலும், வழங்கப்பட்ட கடனிற்கு எதிராக | ஏற்றுக்கொள்ளப்பட்டது | நிலுவையாகவுள்ள கடன் மீதியினை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

இடகுவைக்கப்பட்டிருந்த ஆதனத்தின் பெறுமதி ரூபா 1.187 பில்லியன் ஆகுமென 2018 திசெம்பர் 20 ஆந் திகதி விலைமதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் உறுதிப்படுத்தப் பட்டதுடன் 2020 பெப்ரவரி இறுதியில் உள்ளவாறு கடனிற்கு எதிராக அடகுவைக்கப்பட்ட ஆதனத்தின் எதிர்காலப் பெறுமதி ரூபா 653 மில்லியனாகும்.

## 3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திட்டத்தினால் குறித்துரைத்த முதன்மை வணிகர் ஒருவரின் 2016 மார்ச் 31 ஆந் திகதியன்று முதிர்ச்சியடைகின்ற ரூபா 147.05 மில்லியன் தொகைக்காக 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி பின்னூட்டல் மீள்கொள்வனவு உடன்படிக்கையில் ரூபா 137.18 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தது. குறித்த முதன்மை வணிகர் மேற்படி முதலீட்டின் கீழான பிணைப்பணத்தினை எந்தவொரு புதிய பிணையினையும் சமர்ப்பிக்காது மீளெடுத்திருந்தார்.<br>2015 திசெம்பர் 04 ஆந் திகதி எடுக்கப்பட்ட சபை தீர்மானத்திற்கமைய மேற்படி முதலீட்டினை பிணை தேவையற்ற முதலீடாக சுழலவிடுவதற்கு மத்திய வங்கியின் நாணயச் சபை தீர்மானித்திருந்தது. அதற்கமைய, மேற்படி முதலீட்டின் மீது ரூபா 144.25 மில்லியன் கழிவுநட்டமொன்று 2015 திசெம்பர் 31 ஆந் திகதி நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31 வரையிலும் மேற்படி முதலீடு சுழன்று வந்திருந்ததுடன், 2016 சனவரி 01 முதல் 2019 திசெம்பர் 31 வரையிலான மேற்படி முதலீட்டின் மீதான மூடப்படாத வட்டித் தொகை ரூபா 52.79 மில்லியனாக இருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது | எதிர்காலத்தில் இவ்வா றான இடரினை குறை த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பது டன் நட்டத்தை அறவி டுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |